I Additional District Court, Thoothukudi.

O.S.No.68/2021 நாள் : 28.03.2025

வா.சா.1– திரு. ஜெயக்குமார் சந்தோஷ்.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

புல எண் 333/1பி–ல் என் தகப்பனாருக்கு 63 செண்ட் பாத்தியம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தகப்பனார் நடராஜ நாடார் ஒரு கிரிஷ் ரத்தின கூத்தன் என்பவருக்கு 28.05.2012 அன்று எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் என்றால் சரிதான். **பி.சா.ஆ1**. பி.சா.ஆ1–ன் படி அந்த கிரைய சொத்து கிழமேல் பாதைக்கு வடக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ1–ன் படி என் தகப்பனாரின் கையிருப்பு மனை செண்ட் 12க்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், 23 செண்ட்க்கு மேற்கு என்று சொல்லப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். அதனால் என் தகப்பனாருக்கு புல எண் 333/1பி–ல் 63 செண்ட் பாத்தியப்பட்டதல்ல என்றும், 52 செண்ட்தான் பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி 12 செண்ட் குறித்து என் தகப்பனார் எனக்கு 27.06.2012–ல் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ2**. பி.சா.ஆ2–ல் சொத்து விபரத்தில் என் தகப்பனாரின் கையிருப்பு நிலம் எந்த பகுதியிலும் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு புல எண் 333/1பி–ல் 63 செண்ட் பாத்தியப்பட்டதாக காட்ட ஆவணம் இல்லை. அதனால் புல எண் 333/1பி–ல் என் தகப்பாருக்கு 63 செண்ட் பாத்தியமில்லை. 52 செண்ட்தான் பாத்தியம். பி.சா.ஆ2லும் தெற்கு மாலாக கிழமேல் பொதுப்பாதை காட்டப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் நான் பொன்சித்திரைவேல் என்பவருக்கும், திருமணி என்பவருக்கும் 20.07.2015–ல் எழுதிக் கொடுத்த கிரைய

பத்திரங்களின் நகல்கள் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ 3 மற்றும் 4**. அவற்றிலும் தெற்கு மாலாக கிழமேல் 12 அடி பொதுப்பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் பாதைக்கு வடபுறமாகவும், தென்புறமாகவும் பல நபர்களின் சொத்து உள்ளது. மேற்படி சொத்துக்களுக்கு அதன் உரிமையாளர்கள் மேற்படி கிழமேல் பாதை வழியாகத்தான் போக வேண்டுமென்றால் சரிதான்.

மேலும் 1, 2, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை 3ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.03.28 19:08:42 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.